**புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டம் - 2019**

---

புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஏஜென்சி பிரான்செய்சி டி டெவலப்மென்ட் இற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 02 ஆம் திகதிய சீஎல்கே 101104 எல் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதிய சீஎல்கே 101104 எல் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தி மின்சார விநியோக அமைப்பு உறிஞ்சல் இயலளவை அதிகரித்தல், சராசரி உற்பத்திக் கிரயத்தை குறைத்தல் மற்றும் தனியார் துறை தொடர்பை செயற்படுத்துதல் என்பவற்றின் மூலம் தேசிய மின்சார விநியோக அமைப்பிற்கு புதுப்பிக்கத்தக்க சக்தியை உறிஞ்சுதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் மலிபோட, வெவல்வத்தை, நாவலப்பிட்டிய, றகலவில் 132/33Kv மின்சார விநியோக உப நிலையங்களின் நிர்மாணிப்புக்கள் எனும் பெயரிலான நான்கு கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,660.10 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 46.4 மில்லியன் (யூரோ 41.10 மில்லியன்) தொகையானதுடன் அதில் ரூபா 4,865.90 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 33.9 மில்லியன் (யூரோ 30 மில்லியன்) தொகை ஏஜென்சி பிரான்செய்சி டி டெவலப்மென்டால் நிதியளிக்கப்பட்டு உபகரண வழங்கல் மற்றும் வேலைகளிற்கான ஒப்பந்தங்களின் நிதிப் பகுதிகளிற்கு பயன்படுத்தப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,794.20 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.3 மில்லியன் (யூரோ 11.1 மில்லியன்) மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2016 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் தொழில்நுட்ப ரீதியாக 2019 ஒக்தோபர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை | | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | | | | |
| | | **ஒப்பந்ததாரர்** | **வேலை ஆரம்பித்தல் முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகை** | | | |
| (அ) | வேலை ஆரம்பிப்பு முற்பணம் மற்றும் நிறுத்திவைத்தல் பணத்திற்கான மீள்மதிப்பீடு எல்கேஏஎஸ் 21 இன் பிரகாரம் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக பின்வரும் தொகைகள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்றன. | **வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள்** | | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உண்மையான பெறுமதியை பிரதிபலிக்காது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | முற்பணங்கள் மற்றும் நிறுத்திவைத்தல் பண மீதிகள் ஆண்டின் இறுதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| | | B.E.S.T (யூரோ) | (5,616,604.35) | | | |
| | | SIEMINS LTD (யூரோ) | 141,665.65 | | | |
| | | ABB | (1,044.15) | | | |
| | | Hengtong Oplic Eelct | 15,639.31 | | | |
| | | Apar Industries | 143,578.78 | | | |
| | | **நிறுத்தி வைத்தல் பணம்** | | | | |
| | | B.E.S.T (யூரோ) | 810,521.28 | | | |
| | | ABB | (165,120.39) | | | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) உரிய செலவின வகைப்படுத்தல்கள் இனங்காணப்படாமல் பின்வரும் செலவினங்கள் சம்பளங்களாக இனங்காணப்பட்டிருந்தன. | முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ளும் போது செலவின வகைப்படுத்தலின் உண்மையான விளைவை பிரதிபலிக்காது. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் இதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் முறையாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

| **வெளிப்படுத்தப்பட்ட செலவின வகைப்படுத்தல்** | **உள்ளடக்கப்பட்ட செலவின வகைப்படுத்தல்** |
|---|---|
| முகாமைத்துவ பதவியணி சம்பளம் | முகாமைத்துவ பதவியணி படிகள் |
| ஏனைய பதவியணி சம்பளங்கள் | ஏனைய பதவியணி மேலதிகநேர செலவினங்கள் |
| | ஏனைய பதவியணி படிகள் |
| | விடுமுறை நாள் கொடுப்பனவு – ஏனைய பதவியணி கணக்கு |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| (அ) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வுக் காலப்பகுதியின் போது செயற்திட்டம் உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 4,799,734 தொகையான PAYE வரியை கழிக்காமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து இதனை செலுத்தியிருந்தது. | செயற்திட்டக் கிரயம் தேவையில்லாது அதிகரிக்கின்றது. | PAYE வரிக்கான பொறுப்பு சீஈபீயின் ஊழியர்களிற்கு மேற்கொள்ளப்பட்டதால் சீஈபீயால் அதன் ஊழியர்களின் PAYE வரிப் பொறுப்பு தாங்கிக்கொள்ளப்பட்டிருந்தது. இது மின்வலு, சக்தி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு பல தடவைகள் தொழிற்சங்கத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது. எனினும் ஊழியர்களிற்கு மீளவும் இது சென்றடைவது தொடர்பாக கருத்தொருமைப்பாடெதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. 2018-01-04 இல் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை 2018-04-23 ஆம் திகதிய 2068/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இணங்கப்பட்ட சம்பளத்தை மாற்றுவது கூட்டு உடன்படிக்கையை மீறுகின்ற ஒன்றாக தற்போது | PAYE வரியானது ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தோன்றுவதுடன் இது மேலதிக சட்டரீதியான பின்விளைவுகளையும் உருவாக்கும். | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை. | செயற்திட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாடுகள் முறையாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்தின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக செயற்திட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

- கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,865.90 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் ஒதுக்கீட்டில் 61.13 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,666.40 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 18.34 மில்லியன் மாத்திரமே செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்ததிலிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

- உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்தோபர் 31 அளவில் தொழில்நுட்ப ரீதியாக பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் மேலதிக பொது முகாமையாளரால் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 2020 ஒக்தோபர் 31 வரை செயற்திட்டக் காலப்பகுதி நீடிப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் இலங்கை மின்சார சபையால் 2021 சனவரி 31 வரை கோரப்பட்ட குறைவான கால நீடிப்பிற்காக ஏஜென்சி பிரான்செய்சி டி டெவலப்மென்ட்டால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கான சான்றெதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றம் 73 சதவீதத்தில் காணப்பட்டதுடன் இது எதிர்பார்க்கப்பட்ட 78 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது குறைவாக காணப்படுகின்றது.

## 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 9 – குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் இலங்கை மின்சார சபையால் சுங்கத் தீர்வை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த விலைப்பட்டியல் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த பதினொரு வாகனங்கள் இலங்கை மின்சார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.